# சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி

இலாப நோக்கமற்ற 501(C) வரி விலக்கு பெற்ற நிறுவனம்

# SAN ANTONIO TAMIL SCHOOL

Non-Profit 501(c) Tax Exempt Organization

MAY - 2025 | சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி ஆண்டு மலர் 2025



# நிர்வாகம் மற்றும் கல்விக்குழு

நீர் இன்றி அமையாது உலகு என்பது போல நிர்வாகம் மற்றும் கல்விக்குழு இன்றி இக்கல்வி குழுமம் கிடையாது. நித்தம் பல நிபந்தனைகளை கடந்து,பாட புத்தகங்களை ஆராய்ந்து தேர்ந்து எடுப்பதில் இருந்து ஆதியும் அந்தமுமாய் விளங்கும் நிர்வாகம் மற்றும் கல்விக்குழுவினர்.



Dr.திருமதி.மாலினி மாரியப்பன்
தலைவர்



திரு.சரவணன் சர்வாரெட்டி
துணைத்தலைவர்



திரு.கோமதி நாயகம் பழநி
செயலாளர்



திரு.சிவகுமார் வீரமணி
துணைசெயலாளர்



திருமதி. ஆர்த்தி சத்தியமூர்த்தி
பொருளாளர்



திருமதி.இலாவண்யா ராஜ்மோகன்
முதல்வர்



திருமதி. பியூலா கிரேஸ் கோபி
துணை முதல்வர்

# வலைத்தளம் மற்றும் தொழில்நுட்ப குழு 24–25

தொழில் நுட்பத்தை தொகுத்து, வலைத்தளத்தில் அனைத்து வசதிகளையும் நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தில் பள்ளி தகவல்களை காண வகை செய்யும் வலைத்தளம் மற்றும் தொழில் நுட்ப குழு



திரு.பாலமுருகன் ரங்கராஜு



திரு.பாலாஜி பாலகுருமூர்த்தி



திரு.மைக்கில் ஏட்டுகூறி



திரு.தினேஷ் குமார் ராமராஜ்

# ஆசிரியர் குழு உரை



திருமதி.பானுப்பிரியா வேலாயுதம் மணியம்



திரு.கார்த்திகேயன் இராசிபாளையம் துரைராஜ்



திருமதி.சங்கீதா தேவி தமிழழகன்



திருமதி.சாரதா தேவி சிவமுருகன்

சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி ஆண்டு மலர் - ஆசிரியர் உரை

அன்புள்ள மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகக் குழுவினர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் வணக்கம்.

சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளியின் 2024-2025 ஆண்டு மலர் உங்கள் கைகளில் தவழும் இந்த தருணத்தில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். நமது மாணவர்களின் பன்முகத் திறமைகளையும், கல்விப் பயணத்தையும், கலை மற்றும் கலாச்சாரப் பங்களிப்புகளையும் மலரும் மொட்டுகளாய் எங்கள் பள்ளித் தோட்டத்தில், ஆசிரியரின் அன்பில் அறிவொளிப் பூட்டத்தில் கலையின் மேடையில் மின்னும் நட்சத்திரங்களாய், கலாச்சாரப் பண்பில் நிலைக்கும் சிற்பங்களாய் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரும் ஒரு முயற்சியே இந்த ஆண்டு மலர்.

கடந்த ஆண்டு நமது பள்ளி பல புதிய சாதனைகளையும் மைல்கற்களையும் எட்டியுள்ளது. மாணவர் உழைப்பும், ஆசிரியர் அர்ப்பணிப்பும், பெற்றோர் ஆதரவும், இணைந்த பெரும் சிற்பம். இணைந்த கரங்களால் விளைந்த இந்த வெற்றி, உயிர்ப்புடன் நிற்கும் இதுவே சரித்திரம். நம் பள்ளி பதித்த தடம் அழியாச் சுவட்டின் பதிவாய் இந்த ஆண்டுமலர் தங்கள் முன்னே வைப்பதில் பெருமை கொள்கிறது ஆசிரியர் குழு.

இந்த ஆண்டு மலரை மெருகூட்ட வாய்ப்பளித்த நிர்வாக குழுவிற்கும், மனமுவந்து படைப்புகளை வழங்கிய அன்பு மாணவர்கள் மற்றும் அவர்களை இடைவிடாது ஊக்குவித்த ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். உங்களின் பங்களிப்பு இல்லையேல் இது சாத்தியமில்லை.

இந்த மலர் நமது மாணவர்களுக்கு ஒரு உத்வேகமாக அமைந்து, தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல அவர்களை ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம். உங்கள் மேலான கருத்துகளையும், ஆதரவையும் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,

**ஆசிரியர் குழு**

**சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி**



# சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி 2024-25

## வாழ்த்துரை

முதற்கண் நம்மை படைத்த கடவுளுக்கு நன்றி!

உலகின் மூத்த மொழியாக இருந்தும் இன்றளவும் இளமையாக இருக்கிறாள்.

தமிழ்மொழியின் வளம் பெருகுகின்றதே தவிர குறையவில்லை.

அப்படிப்பட்ட தமிழே, தமிழாகிய பெண்ணே, தாயே உன்னை வாழ்த்துகிறேன்.

நீ வாழ்க!

என்கிற என்றும் அழியா தமிழின் பெருமையை நினைவில் கொண்டு, சிறப்புமிக்க சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளியின் 2024-25 ஆம் ஆண்டின் ஆண்டு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்த வாய்ப்பினை நல்கி இருக்கிற பாசத்திற்கும் மரியாதைக்கும் உரிய இப்பள்ளியின் முதல்வர், துணை முதல்வர், அலுவலக தன்னார்வலர் குழு மற்றும் ஆண்டு மலர் குழுவினருக்கு என் மனமார்ந்த நன்றிகள். இப்பள்ளியின் முதுகெலும்பான ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவ மாணவியரை உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்தி வணங்குகிறேன்.

21ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி ஒரு சில பெற்றோரின் தமிழ் மொழிப் பற்றாலும் அடுத்த தலைமுறை தமிழ் மொழியை மறந்துவிடக் கூடாதே என்ற ஆதங்கத்தாலும் 15 பிள்ளைகளோடு 2005ஆம் ஆண்டு

தொடங்கப்பட்டது. அத்தமிழ்ப் பள்ளி இன்று 234 மாணவர்களுடனும், 35 க்கும் மேற்ப்பட்ட தன்னார்வ ஆசிரியர்களுடனும், தமிழுக்குத் தொண்டு செய்ய எப்போதும் தயாராக இருக்கும் 25 க்கும் மேற்ப்பட்ட கல்விக் குழு மற்றும் தொண்டுக் குழுவினர்களுடனும் தமிழ்ப் பள்ளி சிறப்பாக செயல்படுவது பெருமிதம் அடையச் செய்கிறது.

**"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து" திருக்குறள் - 596**

நினைப்பது எல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்கட்டும். அவ்வுயர்வான எண்ணம் ஒருவேளை வேறு காரணங்களால் நிறைவேறாது போனாலும், பெரியோர் நம்மைப் பாராட்டுவர். ஆகவே, அது நிறைவேறியதாகவே கருதப்படும். இக்குறளுக்கேற்ப, மாணவர்களது வாழ்வில் தமிழ் மொழி வாயிலாக அறிவொளியினை ஏற்றி உயர்ந்த பண்புகளைப் ஊட்டி சிறந்த குடி மக்களாகவும் தலைவர்களாகவும் விளங்க, சிறந்த பணியினை செய்து நிறைவேற்றி கொண்டிருக்கிற இப்பள்ளியினை வெகுவாகப் பாராட்டுகிறேன். எங்கள் பள்ளியின் இத்தகைய உயரிய செயல்பாட்டிற்குக் காரணம் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் கூட்டு முயற்சியுடனும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதுதான்.

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு. திருக்குறள் - 211**

கைம்மாறு கருதி மழை பொழிவதில்லை; அந்த மழையைப் போன்றவர்கள் கைம்மாறு கருதி எந்த உதவியும் செய்பவர்கள் அல்லர். இத்தகைய ஒரு மாபெரும் தன்னார்வலர் குழுவிற்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் பணி புரிய எனக்கு கிடைத்த வாய்ப்பு என் பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். மாணவச் செல்வங்கள் அனைவரும் செம்மொழியாம் தமிழ் மொழியில் தேர்ந்து தமிழர் வாழ்வியல் பெருமைகளையும் உணர்ந்து நாளை சிறந்த குடி மக்களாக மிளிர்வதற்கும், சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி மேன்மேலும் புதிய உச்சத்தை தொடவும் எமது வாழ்த்துக்கள். இங்கு வாழ்த்துரை வழங்க எனக்கு தரப்பட்ட நல்ல வாய்ப்புக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறி, என் உரையை நிறைவுக்கு கொண்டு வருகிறேன்,

நன்றி வணக்கம்!

**Dr.திருமதி.மாலினி மாரியப்பன்**
**தலைவர்**
**சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி**



# முதல்வர் ஆண்டறிக்கை

இன்னுமொரு சிறந்த ஆண்டை நிறைவு செய்யும் இந்த வேளையில், “சிறந்த வளர்ச்சிப் பயணத்தின் ஓர் ஆண்டு” என்ற இந்த ஆண்டில் நாம் அனைவரும் இணைந்து சாதித்தவற்றைப் பார்த்து நான் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன். நாடு பல கடந்து வந்தாலும், நமது குழந்தைகளுக்குத் தமிழை மனதில் ஊட்டி வளர்ப்பதில் தமிழ்ப் பள்ளி மிகவும் பெரும் பங்காற்றுகிறது. இந்த அரும்பெரும் பணியில் நானும் ஆசிரியராகப் பணிபுரிய வாய்ப்புக் கிடைத்திருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆகஸ்ட் திங்கள் 24 ,2024ல் ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சி முனைவர் திரு. கோபால் கிருஷ்ணன் அவர்களால் வழங்கப்பட்டு, செப்டம்பர் 7, 2024 ல் சுமார் 40 ஆசிரியர்களுடன் தொடங்கப்பட்ட கல்வியாண்டு 2024-25, நெல்மணிகள் கொத்து கொத்தாகத் தொங்கும் பொழுது பார்ப்பதற்கு அழகாக மனதிற்கு மகிழ்ச்சியாகவும் இருக்கும். அவ்வண்ணமே, எமது பள்ளியில் இவ்வருடம் 229 குழந்தைகள் நெல்மணிபோல் சேர்ந்து நமது பள்ளியைப் பசுமையாக அலங்கரித்தனர். நாம் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்குத் தமிழை கற்கும் வாய்ப்பு மட்டுமல்ல பல போட்டிகள் உருவாக்கி கொடுத்து அதில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தியது . அதை நான் கண்டு வியந்த விஷயங்கள் பல சின்ன சிறு குழந்தைகளின் வாயில் ஆத்திச்சூடி திருக்குறள் பாரதியார் கவிதைகள் பல கண்டு நான் வியந்து வியப்படைந்தேன்.

நமது பள்ளியின் இதயமான மாணவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துள்ளனர். தமிழ் மொழியின் அழகு, ஆத்திச்சூடி மற்றும் திருக்குறள் போன்ற பழங்கால நூல்களின் ஞானம், மற்றும் பாரதியார் போன்றோரின் ஊக்கமளிக்கும் வார்த்தைகளைத் தழுவுவதில் அவர்களின் ஆர்வம் உண்மையிலேயே ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்த ஆண்டு, நாம் முதன்முறையாகப் பல தமிழ் போட்டிகளை நடத்தினோம், இது நமது குழந்தைகளை ஊக்குவித்தது மற்றும் மாணவர்கள் பல தமிழ் நிகழ்வுகளில்

பங்கேற்க உதவியது. மழலை தமிழில் ஆத்திச்சூடி, திருக்குறள், பாரதியார் கவிதைகள் ஆகியவற்றை கூறும் பொழுது நான் அடைந்த மன மகிழ்ச்சியை இந்த சிறு குறிப்பில் அடக்கிட முடியாது. நமது பள்ளியில் குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை மூலம் நடந்த 133 திருக்குறள் 60 நொடிகளில் நடத்தும் நிகழ்ச்சியில் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை மூலமாக நமது பள்ளியில் மாணவர்களுக்கு ஓவிய போட்டியும் நடத்தப்பட்டது. அதில் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இத்தகைய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளைக்கு மிக்க நன்றி.

இந்த கல்வி ஆண்டை அயராத உழைப்பாலும், அர்ப்பணிப்பாலும் வெற்றிகரமாக நமது மாணவர்களின் வளர்ச்சிக்கும், பள்ளியின் நோக்கத்திற்கும் என்னுடன் பயணித்த ஆசிரியர்களின் ஆழமான பற்றுறுதி விலைமதிப்பற்றது. ஒன்றிணைந்து எதிர்கொண்ட தனித்துவமான சவால்களின் மத்தியிலும், அவர்கள் ஒவ்வொருவரும் செலுத்தியுள்ள அசாதாரணமான முயற்சிக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறவு கண்டோம், உம் கரம் கோர்த்து நடந்தோம், உயர்வெல்லாம் கண்டோம், இனிவரும் காலமெல்லாம் இன்பத்தாய் நனைவோம். மீண்டும் ஒருமுறை நன்றியெனும் மலர்களைத் தூவுகிறேன்.

சிகரம் என்ற சிம்மாசனத்தில் இருந்தாலும், தன்னார்வு தொண்டனாய் தன் தகுதி பாராமல் எம்பிள்ளைகள் தமிழ் கற்க உழைத்த பராமரிப்பு குழு உறுப்பினர்களுக்கும், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து வகுப்புகள் எக்காரணத்திற்காகவும் நிற்காமல் நடந்திட உதவிய மாற்று ஆசிரியர்கள் குழு, வருகை பதிவேற்ற குழுவிற்கும் மற்றும் வலைத்தளம் மற்றும் தொழில்நுட்ப குழுவிற்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நான் எடுத்த அனைத்து முயற்சிகளையும் ஊக்குவித்து ஆதரித்த நிர்வாகம் மற்றும் கல்விக் குழுவிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி மேலாண்மை குழுவிற்கு மிக்க நன்றி!!

**திருமதி.இலாவண்யா ராஜ்மோகன்**
**முதல்வர்**
**சான் ஆண்டோனியோ தமிழ்ப்பள்ளி**





குணா குகை

# என் இன்ப சுற்றுலா

**கனிஷ்கா நெல்லாம் நாகராஜன், 11A–B**



படகு சவாரி

சுற்றுலா செல்வதென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்.நான் சென்ற பயணங்களில் மறக்க முடியாதது என்றால்,அது கொடைக்கானல் பயணம் தான்.கடந்த ஆண்டு மே மாதம் இந்தியாவிற்கு சென்றோம்.அங்கிருந்து பேருந்தில் கொடைக் கானலுக்கு நானும்,என் அப்பா,அம்மா, தங்கை மற்றும் எங்களது உறவினர்கள் அனைவரும் சென்றோம்.சுமார் மூன்று நாட்கள் அங்கு உள்ள இடங்களை சுற்றி பார்த்தோம்.



### குணா குகை

இந்த குகை கொடைக்கானலில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் அமைத்துள்ளது. இதனை ‘டெவில்ஸ் கிச்சன்’என்றும் அழைப்பர்.

பின்னர் கொடைக்கானல் ஏரியில் படகு சவாரி செய்தோம்.இதற்கு ‘நட்சத்திர ஏரி’ என்ற பெயரும் உண்டு.



வைகை அணை



கொடைக்கானல்


மோயர் பாயிண்ட்

**பசுமை பள்ளத்தாக்கு:**

இதற்கு 'தற்கொலை முனை' அதாவது 'சுயிசைட் பாயிண்ட்' என இன்னொரு பெயரும் உண்டு.

**பைன் காடு:**

சுமார் 60 முதல் 80 அடி வரை வளரக்கூடிய இந்த மரங்கள் சூரிய ஒளி புக முடியாத அளவிற்கு அடர்த்தியாக இருக்கும்.இங்கு புகைப்படம் எடுப்பதற்கு மிக அருமையாக இருக்கும்.

**மோயர் பாயிண்ட்:**

இந்த இடத்தில் பள்ளத்தாக்கு களின் அற்புதமான காட்சிகளை கண்டு ரசிக்கலாம்.

**ரோஜா தோட்டம்:**

சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது இந்த ரோஜா தோட்டம். விதவிதமான ரோஜாக்களை இங்கு பார்க்கலாம்.

**பூம்பாறை:**

கொடைக்கானலில் இருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு மலை கிராமமாகும். நாங்கள் அங்குள்ள குழந்தை வேலப்பர் முருகன் கோவிலுக்கு சென்று வழிபட்டோம். அதன் பிறகு வரும் வழியில் வைகை அணையை சுற்றி பார்த்தோம். இவ்வாறு மேற்கண்ட இடங்களை பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் சென்று கண்டு மகிழ்ந்தோம்


ரோஜா தோட்டம்


பூம்பாறை


குழந்தை வேலப்பர் முருகன் கோவில்



# என் ஆத்திச்சூடி கதை






கிருஷ்வி குமார்,
E1 B

எல்லாருக்கும் வணக்கம். நான் ஒரு கதை சொல்ல போறேன் கதையோட பேரு ”வீழ்ந்த குதிரை, மீண்டும் எழுந்த மனிதன்".

ஒரு கிராமத்தில், கிருஷ்ணன் என்ற விவசாயி இருந்தார். அவருக்கு வீரன் என்ற ஒரு அழகான குதிரை இருந்தது. அது பல ஆண்டுகளாக விவசாய வேலைக்கு உதவியது. ஒரு நாள் வீரன் கீழ விழுந்துடுச்சாம் . அதோட காலு உடைஞ்சு போச்சாம். உடனே அந்த கிராமத்து மக்கள் எல்லாரும் இனிமே உன் வீரன் ஓடவே ஓடாது. ஒன்னு அதை வித்துடு இல்லாட்டா வேற குதிரை வாங்குனு சொன்னாங்களாம். அதை கேட்ட வீரன் ரொம்ப சோகமா ஆகிடுச்சாம்.

ஆனால் கிருஷ்ணன் கவலைப்படவில்லை. அவன் நிதானமா, அன்பா குதிரையை பராமரித்தான். ஒவ்வொரு நாளும், நல்ல உணவு கொடுத்து, அதன் காலை மெதுவாக அழுத்தி, மருந்து போட்டான்.

கொஞ்ச நாள் பிறகு வீரன் மெல்லமா எழுந்து நடந்துச்சாம். இதை பார்த்த மக்கள் கிருஷ்ணன் கிட்ட சொன்னார்களாம் " நீ நம்பிக்கை வெச்ச அதனால உன் வீரன் எழுந்து நடக்குது "அப்படினு. பதிலுக்கு கிருஷ்ணன் சொன்னானாம் நீங்க எல்லாருமே நம்பிக்கை இல்லாம தீய கருத்துகளை சொன்னீங்க. அதையெல்லாம் நான் மனசுல எடுத்துக்காம நம்பிக்கை கைவிடாம முயற்சி செஞ்சேன் அதனால தான் வீரன் திரும்ப நடக்குதுனுன்னு பெருமையாக சொன்னான்

இந்த கதைலேர்ந்து என்ன புரியுது?? நம்ம வாழ்க்கைல பல கஷ்டங்கள் வரும், ஆனா நம்பிக்கையோட , முயற்சி விடாம இருந்தால் வெற்றி நமக்கே!. இதைதான் நம்ம அவ்வை பாட்டி “தீயவை நீக்கேல்", "ஊக்கமது கைவிடேல்" அப்படினு நமக்கு சொல்லி கொடுத்திருக்காங்க.

என்னோட கதை உங்களுக்கு பிடிச்சிருக்கும் நினைக்கிறேன்! கதையை பொறுமையா படிச்சதுக்கு இந்த சின்ன கிருஷ்வியின் வணக்கங்கள்!



# அரும்புகளின் அறிவு குவியலுக்கு நன்றியுரை

கண்களில் கனவுகளோடு,பெற்றோர்
இலட்சியத்தை நெஞ்சோடு வைத்து
நாள் ஒன்று பொழுதொண்டென்று
விடுமுறை நாளன்றும் வீட்டிலிராமல்
இடைவிடாது,தமிழ் பள்ளிக்கு வந்து
தத்தி தத்திப் பேசும் தாய்மொழியான
தன் தமிழ்மொழியை தனதாக்க
தமிழ் கலாச்சாரம், பண்பாடென்றும்
தாய் மொழியின் வளமையையும் ,
தன்மையையும் தன் உதிரத்தில்
உறையவைக்க- உயிரோவியமாக ஓடிவந்து
நித்தம் தமிழ் புத்தகம் படித்து
புது புது அர்த்தங்கள் அறிந்து
தமிழ் எண்கள் முதல் எழுத்து வரை
அனைத்திலும் ஆசானாக அன்றாடம் பாடுபடும்
எம் அரும்புகள் தம் படைப்புகள்
பல எழுதி பள்ளிக்கு வந்து
அதை களையெடுத்து படைப்புகளை
கதைகளாக,கவிதைகளாக,கட்டுரையாக
நம் கண்களுக்கு விருந்தாக்கி
தம் அறிவு விடியலை நோக்கி வீரப்படையெடுத்து
மலரில் ஆண்டு மலரில் -மொட்டுகளாய்
இணைந்து பூக்களாய் மலரும்
எம் தமிழ்ப்பள்ளி குழந்தைகளையும்
அவர்கள் படைப்புகளையும்
அழியாச் சுவற்றின் பதிவாய் அரும்புகளின்
படைப்புகளை இங்கு பறைசாற்றுவதில்
பெருமை கொள்கிறது ஆண்டுமலர் ஆசிரியர் குழு



**திருமதி. பானுப்பிரியா மதன்**
**ஆண்டுமலர் ஆசிரியர் குழு.**








# அமெரிக்காவில் தமிழ் கல்வியின் முக்கியத்துவம்



காஷ்வி குமார்
(11 B)

தமிழ் சொந்தங்களுக்கு காஷ்வியின் அன்பு வணக்கம்!!... மனசுல நிக்கிற ஒரு பதிவோட தொடங்குகிறேன் சொந்தங்களே ...

முத்துலிங்கம்னு ஒரு போற்ற தகுந்த எழுத்தாளர் ஒருவர் இங்க கனடால இருக்காரு... அவரோட பதிவு இது... அவரு ஒரு முறை முடித்திருத்தம் பண்ண போறாரு .... அங்க முடிதிருத்தும் கலைஞர் கண்ணாடியை பார்த்து பேசறாரு ஏதோ புரியாத மொழியில்... இவர் பல மொழி கண்டவர் பல நாடுகள் பார்த்தவர் அதனால் இது என்ன மொழின்னு புரியலையே தம்பி ஏன் இப்டி செய்றீங்கன்னும் கேட்க? அந்த கலைஞர் பதில் சொல்றாரு.. “அய்யா இது அராமிக் எனும் ஒரு மொழி.... உலகத்துலயே 400 பேரு தான் இன்னும் பேசிக்கிட்ருக்கோம்.... நான் இதை பேசணும்னா என் நண்பனை தேடி 400 km போகணும்.... நேரமின்மை காரணமா எப்போதெல்லாம் முடியுதோ என்ன நானே கண்ணாடில பார்த்து பேசி பழகுறேன்னு”... ரொம்ப கஷ்டம் குடுக்க கூடிய ஒரு பதிவுங்க.

பல தொன்மையான மொழிகள் இன்னைக்கு இல்ல... இந்த மொழிகளோடு பயணப்பட்டு தன்னை தானே காத்துகொண்ட ஒரு சுயம்பு நம் தமிழ் மொழி... என் போன்ற தமிழ் மண்ணில் இல்லாத மாணவர்களுக்கு இருக்கிற இடத்துல இந்த மொழியை காப்பாத்துகின்ற மிக பெரிய பொறுப்பு இருக்கு சொந்தங்களே... இதை எனக்கு சொல்லி குடுக்க கூடிய ஒரே வழி தமிழ் கல்வி மட்டும் தான் நண்பர்களே!....

**தமிழுடன் உரையாடல்:**

என்னை அசத்துதுங்க தமிழ்.... படிக்க தூண்டுது.... யோசிக்க வைக்குது.... சூழ்நிலை விளக்குது....

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு- ஔவையின் சொற்கள்.... எங்கம்மா அப்பா முதல் பாதியை பண்ணிட்டாங்க.... திரைகடல் ஓடியாச்சு.... நமக்காக மட்டுமே யோசிக்கும் நம் நாட்டை, வீட்டை, சொந்தங்களை விட்டு வந்தாச்சு.... என் பங்குக்கு நான் எப்படி திரவியம் தேடணும்னு யோசிக்கிறப்போ, தமிழ் சொல்லுது "என்னை படி.. நான் இருக்கேன் பாத்துக்கிறேன்" என் தாய் தந்தை வழி சொந்தம் என் கூட இருந்தால் என்ன சொல்லி தருவாங்களோ அதை சொல்லி தராங்க எனக்கான.

### தமிழ் கற்றுக்கொடுக்கும் அடக்கம்.

தமிழ் என்னை கொஞ்சுது, பாராட்டுது, கூப்பிட்டு புத்தி சொல்லுதுங்க!... அடக்கம் கற்றுத் தருகிறது. "தடங்கண்ணாய்.... விரிந்த கண்களையுடைய பெண்ணே கேள்"....

"இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்"

என்கிட்ட சொல்லுதுங்க இயல்பிலேயே அடக்கம் இல்லாதவங்க எவ்வளவு படிச்சாலும் அடங்க மாட்டார்களாம். அதை ஒரு அழகான உவமையும் சொல்லுது.

"உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்"

பேய் சுரைக்காய்னு ஒன்னு இருக்கு பெண்ணே... கசப்புதான் அதன் இயல்பு... உப்பு, நெய், பால், தயிர் பெருங்காயம் எல்லாம் சேர்த்தாலும் அதோட கசப்பு குறையாது.... பிரயோஜனம் இல்லாம போய்விடும். இப்படி ஒரு அழகான பதிவை சொல்லி அடக்கமாக இருன்னு சொல்லிக்கொடுக்குது.

### தமிழ் கற்றுக்கொடுக்கும் கோவமின்மை

அதோட சேர்த்து கோவத்தைக் கட்டுப்படுத்த சொல்லி தருதுங்க. எல்லா வயதினருக்கு மான பதிவு. கதமின்மை ஈன்று என்ற பகுதியில் நாலடியார் கூறியது

"மதித்திறப்பாரும் இறக்க மதியா
மிதித்திறப் பாரும் இறக்க - மிதித்தேறி
ஈயுந் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயும் கதமின்மை நன்று"

மதிப்பவர்கள் மதிக்கட்டும், மதியாமல் மிதிப்பவர் மிதிக்கட்டும், அற்ப ஈ கூட மிதித்து ஏறி தலை மேல உக்காரும்... இப்படி ஒரு நிலை இருக்குனு உணர்ந்த அறிவானவர்கள் மதிக்காதவங்க மேல கோபப்படாம இருக்கிறது நல்லதுன்னு நகைச்சுவையாக யோசிச்சு இங்கிருந்து வந்தது தான் தனுஷ் மாரி படத்துல சொல்லறாரு போல. "அதாவது ஒருத்தன் தூங்கிட்டு இருக்கப்ப கொசு கடிச்சா கொசு பெரியாள் ஆகிறாது!" அங்கே சினம் கொள்ள தேவை இல்லை... சினமின்மை கத்து தருகிறது என் தமிழ் கல்வி!!

### தமிழ் கற்றுக் கொடுக்கும் குடும்ப ஒழுக்கம்:

குடும்ப ஒழுக்கம் சொல்லி தருகிறது என் கல்வி!

"குடிப்பிறந்தார் குன்று ஒழுக்கம்
இருக்கை எழலும் எதிர் செல்லவும் ஏன விடுப்ப ஒழிதலோ"

**இருக்கை எழல்**- பெரியவங்க வரப்போ இருக்கை விட்டு எழுந்திடு.... அவங்க கூட பேசு.... **எதிர் செல்** - வயசானவங்க நடந்து வரப்போ எதிரே போய் கை பிடிச்சு கூட்டிட்டு வா.... **விடுப்ப ஒழிதல்**- அவங்க கிளம்பும் போது கொஞ்சம் தூரம் கூட போய் விட்டுட்டு வா... உன் அறையில் புழுங்காதே... மனிதர்களை ஒதுக்காதே.... எழுந்து உறவாடு.... இந்த பண்புகள் தான் உன்னை உயர் குடும்ப ஆள் ஆக்குதுன்னு சொல்லுது.

அதோட ஒரு வரியில் முடிக்குது.... அற்பர்கள் கிட்ட இந்த பண்பை எதிர்பார்க்க முடியாதுனு ஒரு வரிங்க.... விஜய் சேதுபதி ஒரு படத்துல சொல்வார் பண்பை மண்டைக்குள்ள ஏதோ செய்றான்னு . மண்டைக்குள்ள ஏதோ செய்றான்னு "அந்த கடைசி வரி என் மண்டைக்குள்ள அதை செய்யுதுங்க.... யாராவது வரப்போ இதையெல்லாம் செய்யலைன்னா என் மனசாட்சி கேலி செய்யுது..

அடக்கம் கற்க, சினம் குறைய, ஒழுக்கம் மேலோங்க... அஞ்சாமல் அடுத்த அடி எடுத்து வைக்க... இதைத்தாங்க இயல் இசை, நாடகம் கற்றுத்தருவது தமிழ் கல்வி... தமிழ் கல்வியால் கற்போம்... தமிழ் கல்வியை கற்போம்.... கற்றவை கற்றபின் நிற்போம் அதற்கு தக!!!



# திருக்குறள் கதை



**குறள் :**

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்

**குறள் விளக்கம்**

அறிவு நமக்கு அழிவு வராமல் காக்கும் ஆயுதமாகும். பகைவராலும் அழிக்க முடியாத கோட்டை போன்றதாகும்.

**ஆசிரியரின் அறிவாற்றல்**

ஏரிப்பாளையம் என்ற கிராமத்தில் சுந்தரம் என்ற பள்ளி ஆசிரியர் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த அறிவு கொண்டிருந்ததோடு, அன்பும், அறிவும் மிகுந்தவராக விளங்கினார். ஏழை குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி கற்றுக் கொடுப்பார். உதவி என்று யார் கேட்டு வந்தாலும் தன்னால் முடிந்தவரை உதவி செய்வார். சுந்தரம் ஆசிரியர் மீது ஊர் மக்கள் நிறைய மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

மாணிக்கம் என்ற செல்வந்தனும் அதே கிராமத்தில் வாழ்ந்து வந்தான். முரடனாகிய மாணிக்கம் மீது மக்களுக்கு மதிப்போ, மரியாதையோ கிடையாது. மாணிக்கத்தின் மகன் கண்ணன் படிக்கும் பள்ளியில் தான் சுந்தரம் ஆசிரியராக பணிபுரிந்தார். ஒரு நாள் அப்பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் சிறப்புரை ஆற்றினார். இறுதியில் அனைவரையும் உற்சாகப்படுத்த இரண்டு புதிர்களை வினவினார்.



**கீத்திகா இரத்தினகுமார் (11B)**

இது உங்களுக்கு சொந்தமானது. ஆனால் மற்றவர்கள் அதை உங்களை விட அதிகம் பயன்படுத்துவார்கள். அது என்ன? என்று முதல் புதிரை கேட்டார். அனைவரும் வெகுநேரம் யோசித்தனர். யாருக்கும் பதில் தெரியவில்லை. சிறிது நேரத்திற்கு பிறகு, சுந்தரம் ஆசிரியர் எழுந்து நின்று, புதிரின் விடை 'பெயர்' என்று பதில் சொன்னார். தலைமை ஆசிரியர் சரியான விடை என்று கூறினார். அனைவரும் கைதட்டினர்.

அடுத்த புதிர், என்னிடம் நகரங்கள் உள்ளன, ஆனால் சாலைகள் இல்லை. என்னிடம் ஆறுகள் உள்ளன, ஆனால் தண்ணீர் இல்லை. என்னிடம் காடுகள் உள்ளன, ஆனால் மரங்கள் இல்லை. நான் யார்? என்று தலைமை ஆசிரியர் கேட்டார். மாணிக்கமும் அவன் மகன் கண்ணனும் இந்த புதிருக்காவது விடையை கண்டுபிடித்து பாராட்டு பெற வேண்டும் என்று யோசித்துப் பார்த்தார்கள். ஒரு விடையும் தோன்றவில்லை. மாணவர்கள் சிலர்

தவறான விடைகளைக் கூறினர். இறுதியாக, 'வரைபடம்' என்ற சரியான பதிலை சுந்தரம் ஆசிரியர் கூறினார். மாணவர்களும் பெற்றோர்களும் சுந்தரம் ஆசிரியரை கைதட்டி பாராட்டினர்.

செல்வந்தனாக இருந்தும் தனக்கு கிடைக்காத மதிப்பும், மரியாதையும் சுந்தரம் ஆசிரியருக்கு மட்டும் கிடைக்கிறதே என்று மாணிக்கம் பொறாமை கொண்டான். அன்று முதல் ஆசிரியரை எங்கு பார்த்தாலும் மாணிக்கம் வம்புக்கு இழுப்பான். அவமானப்படுத்த நினைப்பான்.

சிறிது நாட்கள் சென்றன. ஒரு நாள் மாலையில், ஆசிரியர் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந் தார். அப்போது மாணிக்கம் தன் தோட்டத்தில் இருந்து பறித்த பூசணிக்காயோடு வந்து கொண்டிருந் தான். மாணிக்கத்துடன் அவனது நண்பர்கள் இரண்டு பேரும் வந்தனர். அவர்களை கண்ட ஆசிரியர் ஒதுங்கி நடந்தார். ஆனால் அவர்களோ ஆசிரியரை வம்பிழுக்க நினைத்து அவரை வழி மறித்தனர். அவர் களிடம் சுந்தரம், நான் சீக்கிரம் வீட்டிற்கு செல்ல வேண்டும், வழியை விடுங்கள் என்றார்.

அப்போது மாணிக்கம், நீங்கள் பெரிய அறிவாளி என்று எல்லோரும் பேசுகிறார்கள். நான் கேட்கும் கேள்விக்கு சரியாக பதில் சொல்லிவிட்டால், உங்களை விட்டுவிடுகிறோம் என்று வீம்பாகப் பேசினான். ஆசிரியரும், என்ன கேள்வி? என்று கேட்டார். என் கையிலுள்ள பூசணிக்காயின் எடை எவ்வளவு? நீங்கள் சொல்லும் பதில் சரியாக இருக்கிறதா? என்று நாங்கள் எடையை நிறுத்துப் பார்ப்போம். சரியாக சொல்லாவிட்டால் நீங்கள் முட்டாள் என்று ஒத்துக் கொள்ள வேண்டும் என்று திமிராகப் பேசினான் மாணிக்கம்.

ஆசிரியர் ஒரு கணம் யோசித்தார். பிறகு மாணிக்கத்திடம், 'இந்தப் பூசணிக்காய், உன் தலையின் எடை அளவு தான் இருக்கிறது. வேண்டுமானால் நிறுத்துப் பார்த்துக்கொள்' என்று பதில் சொன்னார். இதை கேட்ட மாணிக்கமும் அவனது நண்பர்களும் அதிர்ந்து போனார்கள். அட, ஆசிரியர் நம்மை மடக்கி விட்டாரே! பூசணிக்காயின் எடையை சரி பார்க்க தன் தலையை கொய்தால் அல்லவா முடியும். தலையை கொய்ய முடியுமா? என்று திகைத்த மாணிக்கம், தன் நண்பர்களுடன் அந்த இடத்தை விட்டே ஓடிப் போனான். ஆசிரியரும் புன்னகைத்தபடி தனது வீட்டிற்குச் சென்றார். அதன்பின், மாணிக்கம் சுந்தரம் ஆசிரியரிடம் வம்பு செய்வதே இல்லை.



# எங்கள் வாழ்க்கை

நாங்கள் இருவரும் இரட்டையர்கள் நாங்கள் அமெரிக்காவில் உள்ள "விஸ்கான்சின்"ல் பிறந்தோம். எங்களுக்கு மிகவும் நல்ல தாய், தந்தை கிடைத்துள்ளனர். எங்களுக்கு அமெரிக்க வாழ்க்கை பிடித்துள்ளது, அதற்காக நாங்கள் இந்தியாவை விரும்பவில்லை என்று சொல்ல முடியாது. இங்குள்ள பள்ளியும், நண்பர்களும் எங்களுக்கு பிடித்துள்ளது அதனால் தான் இங்கு வாழ நினைக்கின்றோம். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அன்புகாட்டி வாழ்கின்றோம். எங்கள் தாய், தந்தை எங்களின் தேவைகளை நிறைவு செய்து எங்களிடம் அன்பு செலுத்துக்கின்றனர்.

எங்களுக்கு நன்கு படிக்க வேண்டும் என்பதே ஆசை. இது போன்ற குடும்பம் அமைந்ததற்கு நாங்கள் கடவுளுக்கு மிக்க நன்றி சொல்கிறோம்.

நன்றி! நன்றி!

**விகித் சந்தானகிருஷ்ணன் E1 D**
**லோஹித் சந்தானகிருஷ்ணன் E1 D**

# தோல்வியும் தோழனாகலாம்



திருமதி.பிரியதர்சினி
பார்த்தசாரதி
ஆசிரியை

### தோல்வி என்றால் என்ன?

ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு பின்னால் கண்டிப்பாக ஒரு தோல்வி இருக்கும். அந்த தோல்வியை தோழனாகவும் பார்க்கலாம் எதிரியாகவும் பார்க்கலாம் ஆனால் எதிரியாக பாவித்து அதை கண்டு நாம் பயந்தால் நம் வாழ்வின் இலக்கை அடைய முடியாது.

### நாம் ஏன் தோல்வியை நம் நண்பனாக பார்க்க வேண்டும்?

தோல்வியை வெற்றிக்கான வழிகாட்டியாகவும் நம் வளர்ச்சியின் தோழனாகவும் பார்க்க வேண்டும். ஒரு மனிதன் தோல்வியை சந்திக்கும் பொழுது மனதளவில் துவண்டுப் போக நேரும். அவ்வாறு துவண்டு போகாமல் இருக்க நாம் தோல்வியை, நமது கண்டிப்பான ஆசிரியராகவும், நல்ல நண்பனாகவும் நினைத்து அந்த தோல்வியில் ஏற்பட்ட பாடங்களை வைத்து நாம் முன்னேற வேண்டும். அப்பொழுதுதான் அடுத்து நாம் செய்ய இருக்கும் வேலையை சரிவர செய்ய முடியும் வெற்றியும் நிச்சயமாகும்.

### குழந்தைகள் மனதில் தோல்வியை எப்படி மாற்றும்படி செய்யலாம்?

சரி, தோல்வியை நாம் வளர்ந்த பின், தோல்வி நம் தோழன்தான், தோல்வி தான் வெற்றியின் முதல் படி என்று நினைக்க முடியாது, அதற்கு ஏற்ற ஒரு சரியான புரிதல் இருக்க வேண்டும். அந்த புரிதலை சிறுவயது முதல் குழந்தைகளிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

எப்படி என்றால் குழந்தைகள் மனதில் தோல்வியை பற்றின புரிதலை மாற்ற வேண்டும். எப்படி வெற்றியடைந்தால் மனம் பூரிக்கின்றதோ, அதேபோல் தோல்வி அடையும்போது அதை எதிர்த்து நிற்கும் துணிவும், ஏன் தோல்வி அடைந்தோம் என்று அலசி ஆராயும் மனப்பக்குவத்தையும் பிள்ளைகளுக்கு கற்றுத் தர வேண்டும். சிறுவயது பிள்ளைகளுக்கு இதுதான் தோல்வி என்று விளக்க முடியாது. ஏதேனும் அடம் பிடித்துக் கேட்டு அது கிடைக்கவில்லை என்றாலே, அவர்களைப் பொறுத்தவரை அது தோல்விதான். அதே சமயம் அடம்பிடிக்கும் பொழுது அழுது சாதித்து அவர்கள் அழுகையை சகிக்க முடியாமல் வாங்கிக் கொடுத்தால் அது அவர்களுக்கு நல்ல உதாரணமாக அமையாது.

ஒரு போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற முடியவில்லை என்று வருந்தும் குழந்தைகளிடம் , கலந்து கொண்டதே பெரிய விஷயம் என்று பாராட்டி புரிய வைக்க வேண்டும்.

### பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பங்கு

பெற்றோர்களாகிய நாம் எப்படி அதில் இருந்து கடந்து வந்தோம் என்பதையும் சேர்த்து கற்றுக் கொடுங்கள் உங்களுடைய பள்ளிக்கூட அனுபவத்தையும் சேர்த்து சொல்லுங்கள். இன்றைய காலகட்டங்களில் வெற்றியை கொண்டாடினால் மட்டும் பத்தாது தோல்வியை உதாசீனப்படுத்தவும் கூடாது.

தோல்வியை கற்றுக் கொடுக்கும் பொழுது எதிர்காலத்தில் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள், சங்கடங்கள், எதிர்மறையான எண்ணங்களையும் எதிர்த்து போராடி அவர்களால் வெற்றி பெற முடியும் என்ற நேர்மறையான எண்ணங்களை உருவாக்க வேண்டும்.

### முடிவுரை:

நான் பத்தாயிரம் முறைகள் தோற்றேன் என்பது இல்லை;

வேலை செய்யாத பத்தாயிரம் முறைகளை வெற்றிகரமாக கண்டுபிடித்தேன்.

- தாமஸ் ஆல்வா எடிசன்.





# நான் கண்ட பயணம்

வாருங்கள் செல்வோம் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு!!!

கீழிருந்து பார்த்தால் நீர் எங்கிருந்து விழுகிறது என்று தெரியாமல் விழும் நீர் வீழ்ச்சிகளை ஆகாய கங்கை என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நீர்வீழ்ச்சிதான் நயாகரா.

ஈரி ஏரியிலிருந்து வழிந்தோடும் நீரே நயாகரா நதியாக பாய்கிறது. பப்பாலோ என்ற இடத்தில் நயாகரா நீர்வீழ்ச்சியாக, அமெரிக்கா மற்றும் கனடா என்ற இரு பெரிய நாடுகளுக்கு இடையில் கொட்டுகிறது. நயாகரா நீர்வீழ்ச்சி மூன்று பகுதிகளாக இருக்கும்.

கனடாவில் உள்ள குதிரை லாட நீர்வீழ்ச்சி, அமெரிக்கப் பகுதியில் உள்ள அமெரிக்கன் நீர்வீழ்ச்சி, இவை இரண்டும் அல்லாமல் ஒரு சிறிய பிரைடல் வெய்ல் நீர்வீழ்ச்சி உண்டு.



**கிருஷன் கிரிராஜ்**
**E5–A**

படகு மூலம் குதிரை லாட அருவி அருகே செல்ல முடியும். ஆங்கிலத்தில் "மெயிட் ஆஃப் தமிஸ்ட்" என்பது மூன்று அருவிகளையும் படகு மூலம் காட்டும் நிகழ்வுக்கு பெயராகும். அமெரிக்கப் பகுதியிலிருந்தும் கனேடியப் பகுதியிலிருந்தும் இதற்கான படகுகள் செல்கின்றன.

பிரைடல் வெய்ல் அருவி அமெரிக்கப் பகுதியில் அமெரிக்கன் அருவிக்கு அருகில் உள்ளது. இவ்வருவியை கிழிருந்து பார்க்க மரப் படிக்கட்டுகள் அமைத்துள்ளார்கள். இந்த அமைப்பை ஆங்கிலத்தில் "கேவ் ஆப் த விண்ட்ஸ்" என்று அழைக்கிறார்கள்.

நயாகராவில் அமெரிக்காவையும் கனடாவையும் "வானவில் பாலம்" இணைக்கிறது. நயாகரா அருவியின் உயரமும் கொள்ளவும் சேர்ந்தே அதற்கு பெரும்புகழைத் தேடித்தந்தன.

நீரோட்டத்தை பயன்படுத்தி "ராபர்ட்டு மோசசு", "ஆடம் பெக்" என்னும் இரு மின் நிலையங்களும் சேர்ந்து மின்னாற்றல் உற்பத்தி செய்கின்றன. பனிக்காலத்தில் இந்த அருவியும் நதியும் முழுவதுமாக உறைந்துவிடும் என்று சொல்வார்கள். பனிக்காலத்தில் செல்ல நேர்ந்தால் ஒருமுறை சென்று பார்க்க வேண்டும்.

நயாகரா நீர்வீழ்ச்சியில் சுற்றுப்பயணம் சென்றது எனக்கு அந்த இடத்தைப் பற்றி நிறைய கற்றுக் கொடுத்தது. மற்றும் இங்கு நான் என் குடும்பத்தினருடனும், என் தாத்தா, பாட்டி உடன் சென்றது அந்த நேரத்தில் அங்கு தோன்றிய வானவில் போல எங்கள் நினைவுக்கு இன்றும் வண்ணம் அளிக்கின்றது.

# அரும்புகளின் கைவண்ணம்






ஹரிஷ் ஜெயராம் குமார்






நிரஞ்சனா
கௌரிஷங்கர்

# பெண்



பாரதியார் பாடிய "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்பது பெண்ணாக பிறப்பது ஒரு பாக்கியம் என்றும், அதற்கே மாதவம் செய்ய வேண்டிய அளவுக்கு உயர்ந்ததொரு வரம் என்றும் கூறும் வரி.

ஆம் உண்மை தான் ஆனால் நீங்கள் உங்கள் தாய், தந்தையிடம் வாழும் வரைக்கும் தான் பொருந்தும்.

அதற்காக திருமணபந்தமும் ஒன்றும் தாழ்வானது அல்ல அதுவும் உயர்ந்தது தான் எப்பொழுது உயர்ந்தது என்றால் அவர்களுக்கு அமையும் வாழ்க்கை துணையைப் பொறுத்ததே.

திருமணத்திற்கு பின்பு தாய்மை நிலை அடைவோம் அதிலும் ஒரு பெரும் பொறுப்பு தாய்க்கு உள்ளது.

அது ஒரு குழந்தையை நல்லவராய், திறமை ஆனவர்களாய், கல்வி அறிவு உடையவர்களாய் உருவாக்குவதே ஆகும். இத்தனை அன்பும், பொறுப்பும் பெண் ஒருத்திக்குதான் கடவுள் வாய்ப்பை அளித்து இருக்கிறார்.

எனக்கும் தாய், தந்தை, கணவர், குழந்தை எல்லாம் சரியாக அமைந்து இருப்பதால் நானும் பெண்ணாய் பிறப்பதற்க்கு "மாதவம்- செய்து இருக்கிறேன் என்று எண்ணி என் நன்றியை என்னை பெண்ணாய் பிறக்க வைத்த கடவுளுக்கும், என்னை பெண் என்று வெறுக்காமல் எனக்கு நல்ல வாழ்வழித்த தந்தை, தாய்க்கும் என் அன்புகலந்த நன்றிகள்.

நன்றி! நன்றி!



**திருமதி. பாரதி சந்தானகிருஷ்ணன்**
ஆசிரியை



# புத்திசாலி சேவல்

ஒரு நாள் ஒரு சேவல் மற்றும் அதன் தோழனான புறாவும் பேசி கொண்டே காட்டிற்கு வழி தவறி வந்து விட்டதாம். அந்த இருவருக்கும் திரும்ப எப்படி செல்வது என்று தெரியாமல் முழித்து கொண்டு இருக்கும் போது தூரத்தில் ஒரு சிங்கம் வருவதை சேவல் பார்த்தது. அது தன் நண்பனான புறாவிடம் அதை கூறியது அதற்கு புறா எனக்கு பயமா இருக்குது என கூறி ஒரு மரத்தின் உச்சிக்கு சென்று விட்டது.சிங்கமும் இதை பார்த்து விட்டு சேவல் பக்கத்தில் வந்தது வயதான சிங்கம் என்பதால் கண் சரியாக தெரியாமல் நீ யார் எங்கிருந்து வந்து இருக்கிறாய் என சேவலிடம் சிங்கம் கேட்டது. அதற்கு சேவல் நீ காட்டுக்கு ராஜா நான் ஊருக்கு ராஜா. நாம் இருவரும் ராஜா என்பதனால் தான் நமக்கு பிடரி இருக்கிறது. அதிலும் நான் உன்னை விடவும் உயர்ந்தவன் நான் சொன்னால் தான் ஊரே விழித்து எழும். நான் இயற்கையாகவே ராஜா என்பதனால் தான் எனக்கு சிகப்பு கீரிடம் இருக்கிறது. நான் உன்னை விட உயர்ந்தவன் எனக்கு வணக்கம் செலுத்தி விட்டு செல் என பயப்படாமல் தைரியமாக கூறியது. இதை நம்பிய அந்த வயதான சிங்கம் வணக்கம் செலுத்திவிட்டு சென்றது.இதை எல்லாம் மேலே இருந்து பார்த்த புறா கீழ இறங்கி வந்து எப்படியோ தப்பி விட்டோம் என கூறியது அதற்கு சேவல் ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் என கூறி கொண்டு ஊருக்கு திரும்பியது.புறா தான் செய்ததை எண்ணி வருந்தியது.



**ஹர்ஷினி கோலப்பன்**

**E2–I**





# சரியான பதில்

ஒரு காலத்தில ஒரு சக்தி வாய்ந்த தலைமை அதிகாரி இருந்தார். அந்த தலைமை அதிகாரியின் பெயர் ஜான். ஜான் ஒரு கட்டுமான நிறுவனத்தை நடத்தினார். அவர் நிறுவனத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தனர். ஜான் மிகவும இரக்கம் இல்லாதவர், மேலும தொழிலாளர்களை இரவும் பகலும மிகவும் கடினமாக வேலை செய்ய வைத்தார். தொழிலாளர்கள் வேலையை விட நினைத்தனர், ஆனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட காரணத்தால் வேலையை விட முடியவில்லை. மேலும் இந்த வேலை நகரத்துக்கு அருகிலிருந்தது, மற்றும் வேறு நிறுவனங்களை விட அதிக சம்பளம் கொடுத்தது. ஒரு நாள் ஜான் ஒரு தவறு செய்தார், மறுநாள் காலைக்குள் முடிக்க வேண்டிய கட்டட வடிவமைப்பை பற்றி தொழிளாலர்களிடம் சொல்ல மறந்து விட்டார். அப்பொழுது இரவு ஒரு மணி ஆகிவிட்டது, எல்லா தொழிலாளர்களும். ஒரு மணி நேரத்திற்க்கு முன்பே வீட்டிற்க்கு கிளம்பி விட்டனர். வடிவமைப்பை காலைக்குள் முடிக்காமல் விட்டால் அவரின் வேலை போய்விடும். அவர் எல்லா தொழிலாளர்களையும் தொலைபேசியில் அழைத்து உதவி செய்யும்படி கூறினார், ஆனால் அவர் தொழிலாளர்களை நடத்திய விதம் காரணமாக ராஜ் என்னும் ஒருவரை தவிர வேறு யாரும் வரவில்லை. ராஜ் இரவுமுழுவதும் வேலை செய்து வடிவமைப்பை முடித்து கொடுத்தார். ஜான் இவரும் வருவார் என்று எதிர்பார்க்கவில்லை, ஆனால் ராஜ் வந்ததை பார்த்து ஆச்சரியப்பட்டார். ஜான் வெட்கப்பட்டார், மேலும் இனிமேல் தொழிலாளர்கள் மேல் இரக்கம் காட்டுவேன் என்று முடிவு செய்தார்.



**ஆதவ் அருண்**
**11A–A**

குறள் 314:

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

விளக்கம்: நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும் படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.

# முயற்சி திருவினையாக்கும்



யாழினி
விஸ்வநாதன்
E3C

வணக்கம்,

என் பெயர் யாழினி , நான் நம் தமிழ்ப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படிக்கிறேன்.

பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறளில் ஒன்றை மையமாக வைத்து "முயற்சி திருவினையாக்கும்" என்ற தலைப்பில் கதை சொல்லப்போகிறேன்.

முன் ஒரு காலத்தில் ஒரு அழகான கிராமம் இருந்தது, அந்த கிராமத்தில் பெரும்பாலானோர் விவசாயிகள். ஒரு நாள் அந்த கிராமத்திற்கு ஒரு முனிவர் வந்தார், அவர் அந்த கிராமத்தின் நடுவில் உள்ள ஒரு மரத்தடியில் தியானம் செய்து வந்தார். ஆனால் அங்கு வாழ்ந்த மக்கள் அவரை கண்டு கொள்ளவில்லை. முனிவர் அல்லவா, கோவம் வந்து விட்டது. கோவத்தில் இன்னும் ஐம்பது வருடத்திற்கு இவ்வூரில் மழை பெய்யாது, வானம் பொய்த்துவிடும் என்று சாபமிட்டார். இதை அறிந்த மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தனர்.

முனிவரிடம் மன்னிப்பும் கேட்டனர். ஆனால் முனிவர் இந்த சாபத்துக்கு விமோச்சனம் கிடையாது என்று கூறிவிட்டார். நான் உங்களுக்கு ஓர் ரகசியம் சொல்லட்டுமா? இறைவன் சங்கு ஊதினால் தான் இடியும் மழையும் வருமாம். இந்த சாபத்தை கேட்ட இறைவன் இன்னும் ஐம்பது வருடத்திற்கு மழை பெய்யாது ஆகவே, சங்குக்கு ஓய்வுதான் என்று சங்கை தலைக்கு வைத்து படுத்துவிட்டார்.

அப்போது ஒரு அதிசயம் நடந்தது. ஒரு உழவர் மட்டும் தினமும் வயலுக்கு சென்று உழுது வந்தார். ஊரில் இருந்த மக்கள் அவரை முட்டாளாகவே பார்த்தனர். ஐம்பது வருடங்களுக்கு மழை வராது என்று தெரிந்தும் நீ ஏன் தினம்மும் உழவு செய்கிறாய் என்று மக்கள் அவரிடம் கேட்டனர். அதற்கு, அந்த உழவன் இன்னும் ஐம்பது வருடங்களுக்கு மழை பெய்யாது என்று எனக்கும் தெரியம் ஆனால், ஐம்பது வருடத்திற்கு உழவு செய்யாமல் இருந்தால் எப்படி உழவு செய்வது என்று எனக்கு மறந்துவிடும் என்றான். இதை கேட்ட இறைவன் யோசிக்க ஆரம்பித்தார். "இன்னும் ஐம்பது வருடம் கழித்து நமக்கும் எப்படி சங்கு ஊதுவது என்று மறந்து விடுமோ!" என்று நினைத்துச் சங்கை எடுத்து ஊதிப் பார்த்தார். இறைவன் சங்கு ஊதினால் என்ன ஆகும்? இடியும் மழையும் வந்தது, சாபம் நீங்கியது! மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர். இந்த உழவனின் நம்பிக்கையும் விடா முயற்சியும் ஜெயித்துவிட்டது. இதைத் தான் திருவள்ளுவர்,

தெய்வத்தான் ஆகா தெனினுனம் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

என்றார். இனி நாமும் நம்பிக்கையும் விடா முயற்சியும் கொண்டு எல்லா செயல்களிலும் வெல்வோம்!

நன்றி !!



# அமைதியின் தூதுவர்

ஜெஸ்லின் ஜான் – நிலை E 5 A



பறந்து செல்லும் புறாவே,
பசுமை கொண்டு பறப்பாயோ?
சமாதானம் மலரட்டும்,
நமக்குள் உறவு மலரட்டும்!
அன்பை ஏந்தும் அலகுகளால்,
அமைதியின் தூது சொல்லுவாய்!



ஜெஸ்லின் ஜான்,
E5–A



# முயற்சி

நமக்கும் வெற்றிக்கும் இடையில்,
செயல் நின்றால் -அது “தடை”
செயல் நடந்தால் -அது "முயற்சி"

நம்மால் முடியுமா ? என்பது கேள்வி
முயற்சியின் முடிவில் தான் பதில்



பூமியின் சுழற்சியை நிறுத்த நினைத்தோமா!
இரவைதான்  பகலாக்க நினைத்தோமா?
நம்மால் முடிந்ததைத்தான நினைத்தோம்!!

“முயன்றால் வெற்றி கிட்டுமா?” என்று நினைக்காதே,
“முயன்றாலே வெற்றி” என்று நினை.
நமக்கும் வெற்றிக்கும் இடையில் "முயற்சி" மட்டும் தான்

**திருமதி .அபிராமவல்லி இராமகிருஷ்ணன்**
**ஆசிரியை**





# கன்னியாகுமரிக்கு என் வருகை



சுவாதி
கௌரிசங்கர்
(11C)

வெற்றி என்பது கல்வியும் அறிவும் மட்டுமல்ல, அதை வாழ்க்கையில் செயல்படுத்துவதும்.

ஆகஸ்ட் 2021-ல், நாம் எல்லோரும் கன்னியாகுமரிக்கு பயணம் செல்லப் போகிறோம் என்று என் அம்மா கூறினார். அதை கேட்டவுடன் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். அந்த மாலை, நான் பயணத்திற்கு தயாராகிக்கொண்டிருந்தேன். இரவு வந்து விட்டது, மகிழ்ச்சியில் எனக்குத் தூங்க முடியவில்லை. என்ன நடக்கப் போகிறது என்று கனவு கண்டுகொண்டு இருந்தேன்.

சூரியன் எழுந்தது, என் அம்மா என்னை எழுப்பினார். நான் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தேன். நான் தயாராகிக் கொண்டேன். என் சகோதரி என்னைவிடவும் அதிக உற்சாகத்துடன் இருந்தார். நாங்கள் எங்கள் பொருட்களைப் பேக்கிங் செய்து, வேனில் ஏற்றினோம். திடீரென்று என் நெருங்கிய தோழி என்னுடன் பயணத்தில் சேர்ந்து வருகிறாள் என்று என் அம்மா இதை எனக்கு ஒரு ரகசியமாக சொன்னார்கள். மிகுந்த மகிழ்ச்சியில் நான் இருந்தேன், தோழியுடன் பின்பக்க இருக்கையில் அமர்ந்தேன். ஜன்னலின் வழியே பார்த்தபோது, அற்புதமான காட்சி இருக்கப் போகிறது என்பதை நாங்கள் உணர்ந்தோம். நாங்கள் கன்னியாகுமரிக்கு பயணத்தைத் தொடங்கினோம்.

வேன் முன்னே செல்லும்போது, உற்சாகம் முழுவதும் பரவியது. காலை நேரத்தின் குளிர்ந்த தென்றலை அனுபவிக்க ஜன்னலை சிறிது திறந்தோம். என் சகோதரி கடைகள் திறப்பதையும், மக்கள் நடைபயிற்சி செய்யும் சூழலையும், வீட்டின் முன் கோலமிடும் காட்சிகளையும், கிரிக்கெட் விளையாடுவதற்காக செல்லும் குழந்தைகளையும் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். என் அம்மா தன் குழந்தை பருவத்திலான பயண கதைகளை பகிர்ந்து கொண்டார், மென்மையான இசை பின்னணியில் ஒலித்தது, பயணத்தின் அருமையான அனுபவமாக அது மாறியது. வேகத்தடைகள் எங்களை அமர்ந்திருக்கும் இடத்தில் சிறிது உயர்த்தியது, சிரிப்பு முழுவதும் ஒலித்தது, நாங்கள் நகரும் இந்த சிறிய உலகம் மகிழ்ச்சியால் நிறைந்தது.

எங்கள் பயணத்தின் முதல் இடம் கன்னியாகுமரி கடற்கரை. எங்கும் பரந்து விரிந்த கடல் எங்களுக்கு முன்பு எல்லையில்லாததுபோல் தோன்றியது. அலைகள் கரையுடன் மோதி, உப்பு மணமும், காலை வெளிச்சத்தின் பொற்கலையுடன் நீரின் பிரகாசம் அழகாக இணைந்தது.

இந்தியாவின் தென்மேற்கே உள்ள நாங்கள் வங்காள விரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் ஒன்று சேர்ந்த இடத்தில் நின்றதை உணர்ந்தோம்.

கடற்கரையில் இருந்து, நாங்கள் திருவள்ளுவர் சிலைக்கு சென்றோம். இந்த அற்புதமான சிற்பம் 41 மீட்டர் (133 அடி) உயரம் கொண்டது மற்றும் திருக்குறளின் 133 அதிகாரங்களை குறிக்கும். அதன் அடித்தளம் அறம், பொருள், காதல் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது, இதுவே அவரது எழுத்துக்களின் மூன்று முக்கிய கருப்பொருள்களாகும். சிற்பத்தை பார்த்தவுடன், என் அம்மா அதன் அர்த்தத்தை விளக்கினார், தமிழின் பெருமையையும் அதன் ஆழ்ந்த அறிவையும் கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். எங்கள் பயணம் மகிழ்ச்சியுடன் முடிந்தது.

**கடலோடு இணைந்தது போலக் கருஞ்செழுநீர்**
**உளதெனின் உலகம் இனிது.**

# நம் பள்ளியில் நடந்த நிகழ்வுகள் சில



டெக்சாஸ் தமிழ் கல்விக்கழகத்தை சேர்ந்த Dr.திரு.கோபால் கிருஷ்ணன் ஐயா அவர்களால் நம் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கபட்டது






இந்த ஆண்டு குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற நிமிடத்துக்கோர் குறள் என்னும் தலைப்பில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வமுடன் பங்கேற்றனர்

# தற்காப்பு பயிற்சி

துணைமுதல்வர் திருமதி.பியூலா கிரேஸ் கோபி தலைமையில் குழந்தைகளுக்கு தீ அபாயத்தில் இருந்து தங்களை தற்காத்து கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டது.










STAND
TALL
BE PROUD



# போட்டிகள்

நமது பள்ளி பிள்ளைகளின் திறமையை வெளிகாட்டும் விதமாக பள்ளியில் மாறுவேடபோட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, நாடகப்போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.



மாறுவேடபோட்டி



கட்டுரை போட்டி





பேச்சுப்போட்டி





நாடகப்போட்டி



நாடகப்போட்டி




# தமிழ்த்தாய் வாழ்த்து



# திறமை நிகழ்ச்சி

பேச்சுத்திறன் மற்றும் மேடை நிகழ்ச்சி திறனை வெளிப்படுத்தும் வகையில், மாணவர்களுக்கு திறமை நிகழ்ச்சி நடத்தப்பட்டது அவற்றுள் சில இங்கே,




























adidas



















# தமிழ்த்தேனீ








பள்ளியில் நடைபெற்ற தமிழ்த்தேனியில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர. இதில் வெற்றி பெற்ற மாணவர்கள் மண்டல நிலை அளவிலான தமிழ்த்தேனீயில் பங்கேற்றனர்.

# போட்டி முடிவுகள் 2024-2025

## மாறுவேட போட்டி 2024–25

| | |
|---|---|
| **முன் மழலை** | |
| கீர்த்திகா சீனிவாசன் | முதல் பரிசு |
| சின்மயி கார்த்திக் | முதல் பரிசு |
| **மழலை** | |
| ஹேமந்த் கிருஷ்ணா கஜேந்திரன் | முதல் பரிசு |
| சஞ்சீவ் விஸ்வநாதன் | இரண்டாம் பரிசு |
| நிரஞ்சனா கௌரிசங்கர் | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 1 (E1)** | |
| சேயோன் துரை இராசிபாளையம் கார்த்திகேயன் | முதல் பரிசு |
| கிருஷ்வி குமார் | முதல் பரிசு |
| லோஹித் சந்தானகிருஷ்ணன் | இரண்டாம் பரிசு |
| சாஷினி சரவணன் | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 2 (E2)** | |
| சஞ்சய் ராஜ்மோகன் | முதல் பரிசு |
| அஞ்சனா ராஜவேல் | முதல் பரிசு |
| ஷண்விகா பாலாஜி | இரண்டாம் பரிசு |

## கதை சொல்லப் போறோம் 2024–25

| | |
|---|---|
| **முன் மழலை** | |
| கீர்த்திகா சீனிவாசன் | முதல் பரிசு |
| ருஹா சுல்தானா முகமது ஹசன் | இரண்டாம் பரிசு |
| பொழிலன் பொதிகைக் கனயாழ் | மூன்றாம் பரிசு |
| தியா தினேஷ்குமார் | மூன்றாம் பரிசு |
| **மழலை** | |
| நிரஞ்சனா கௌரிசங்கர் | முதல் பரிசு |
| ஹேமந்த் கிருஷ்ணா கஜேந்திரன் | இரண்டாம் பரிசு |
| ஹரிஷ்ஜெயராம் குமார் | இரண்டாம் பரிசு |
| சஞ்சீவ் விஸ்வநாதன் | மூன்றாம் பரிசு |
| விசாகன் திருமலை | மூன்றாம் பரிசு |

## பேச்சுப் போட்டி 2024–25

| | |
|---|---|
| **ஆரம்ப நிலை 1 (E1)** | |
| சாஷினி சரவணன் | முதல் பரிசு |
| அவினவ் அருண் | முதல் பரிசு |
| சஞ்சீவ் சந்திரசேகர் | இரண்டாம் பரிசு |
| அவ்யுக்த் ஆனந்த் | இரண்டாம் பரிசு |
| கிருஷ்வி குமார் | மூன்றாம் பரிசு |
| சேயோன் துரை இராசிபாளையம் கார்த்திகேயன் | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 2 (E2)** | |
| அஞ்சனா ராஜவேல் | முதல் பரிசு |
| ஹர்ஷினி கோலப்பன் | முதல் பரிசு |
| மகிதா தர்மசிவம் | இரண்டாம் பரிசு |
| விரஜலால் தியாடா நந்தலால் | இரண்டாம் பரிசு |
| சாதனா ஆனந்த் | மூன்றாம் பரிசு |
| சாஷினி அருள் பிரகாஷ் காயத்ரி | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 3 (E3)** | |
| மேக்னா சாய் மதன்குமார் | முதல் பரிசு |
| ஹர்ஷந்த் ராஜீவ் | இரண்டாம் பரிசு |
| யாழினி விஸ்வநாதன் | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 4 (E4)** | |
| நேஹா வினோத் கண்ணன் | முதல் பரிசு |
| ரித்திஷ் பன்னீர்செல்வம் | முதல் பரிசு |
| பிரவீணா சீனிவாசன் | இரண்டாம் பரிசு |

| | |
|---|---|
| கிர்த்தீஷ் ராகவேந்திரன் | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 5 (E5)** | |
| ஜோத்ஸ்னா சுவாமிநாதன் | முதல் பரிசு |
| தனிஷ்கா உதயகுமரன் | இரண்டாம் பரிசு |
| கிருஷன் கிரிராஜ் | மூன்றாம் பரிசு |
| **இடைநிலை - கீழ் (I1A)** | |
| கனிஷ்கா நெல்லாம் நாகராஜன | முதல் பரிசு |
| காவ்யா தேன்மொழி குமரன் | இரண்டாம் பரிசு |
| கௌஷிக் ரங்கேஷ் | மூன்றாம் பரிசு |
| **இடைநிலை - நடு (I1B)** | |
| காஷ்வி குமார் | முதல் பரிசு |
| கீத்திகா இரத்தினகுமார் | இரண்டாம் பரிசு |
| தோஷித் ஆதித்யா சுரேஷ் பாபு பானு | மூன்றாம் பரிசு |
| **இடைநிலை - உயர் (I1C)** | |
| சுவாதி கௌரிசங்கர் | முதல் பரிசு |
| கீர்த்தனா ராஜேஷ் | இரண்டாம் பரிசு |
| ஜீவஸ்ரீ கஜேந்திரன் | மூன்றாம் பரிசு |

## கட்டுரைப் போட்டி 2024–25

| | |
|---|---|
| **ஆரம்ப நிலை 3 (E3)** | |
| ஆருஷ் வேணுகோபால் | முதல் பரிசு |
| லக்ஷனா அழகப்பன் | இரண்டாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 4 (E4)** | |
| பிரவீணா சீனிவாசன் | முதல் பரிசு |
| முகுந்த் சேந்தன் இராசிபாளையம் கார்த்திகேயன் | இரண்டாம் பரிசு |
| நக்ஷத்ரா கார்த்திகேயன் | மூன்றாம் பரிசு |
| **ஆரம்ப நிலை 5 (E5)** | |
| ஜோத்ஸ்னா சுவாமிநாதன் | முதல் பரிசு |
| கிருஷன் கிரிராஜ் | இரண்டாம் பரிசு |
| **இடைநிலை - கீழ் (I1A)** | |
| கனிஷ்கா நெல்லாம் நாகராஜன் | முதல் பரிசு |
| **இடைநிலை - நடு (I1B)** | |
| கீத்திகா இரத்தினகுமார் | முதல் பரிசு |
| காஷ்வி குமார் | இரண்டாம் பரிசு |
| **இடைநிலை - உயர் (I1C)** | |
| ஜீவஸ்ரீ கஜேந்திரன் | முதல் பரிசு |
| சுவாதி கௌரிசங்கர் | இரண்டாம் பரிசு |
| கீர்த்தனா ராஜேஷ் | மூன்றாம் பரிசு |

## நாடகப் போட்டி 2024–25

### நாடகப் போட்டி வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| **அரும்புகள்** | |
| விஸ்வேஷ் யுவராஜ் | முதல் பரிசு |
| நக்ஷத்ரா கார்த்திகேயன் | |
| அத்வைத் ஆனந்த் | |
| ஜோஷிதா வினோத்குமார் | |
| ஹர்ஷத் விக்னேஸ்வரன் | |
| சாஷினி சரவணன் | |
| லிகித் சந்தானகிருஷ்ணன் | |
| லோஹித்சந்தானகிருஷ்ணன் | |
| லிர்த்திகா தினேஷ்குமார் | |
| நேஹா வினோத் கண்ணன் | |
| **வாகை** | |
| ஹர்ஷினி கோலப்பன் | இரண்டாம் பரிசு |
| மேக்னா சாய் மதன்குமார் | |
| முகிலன் விஸ்வநாதன் | |
| கீர்த்திகா சீனிவாசன் | |
| பிரவீணா சீனிவாசன் | |
| யாழினி விஸ்வநாதன் | |

## குறள் ஓவியம் 2024–2025

| | |
|---|---|
| தருண் மிருத்வா கணேஷ் குமார் | மூன்றாம் பரிசு |

# ஆசிரியர்கள் குழு

"வேரின்றி மரமில்லை" என்பது போல ஆசிரியர்களின்றி எங்கள் தமிழ்ப் பள்ளி இல்லை. அள்ள அள்ள குறையாத தமிழை வாரிக் கொடுக்கும் எங்கள் கொடை வள்ளல்கள் இவர்கள். எங்களின் அத்துனை படிகளிலும் துணை நிற்கும் எங்களின் ஆசிரிய பெருமக்களுக்கு கோடான கோடி நன்றிகள்!



திருமதி. ஆர்த்தி சத்தியமூர்த்தி



திருமதி. அபிராமவல்லி இராமகிருஷ்ணன்



திரு. ஆல்வின் ஜேம்ஸ்



திருமதி. அன்சோ ஷாமினி எக்பர்ட் ஜெலஸ்டின்



திருமதி. அஸ்வினி சம்பத்



திருமதி. பானுப்பிரியா வேலாயுதம் மணியம்



திருமதி. பாரதி சந்தானகிருஷ்ணன்



Dr. கரோலின் ரெஜினா டெல்மா சேவியர் பால் எழிலன்



திருமதி. திவ்யா ரெங்கராஜ்



திரு. இளையதாசன் இராமச்சந்திரன்



திருமதி. எழிலரசி ஏழுமலை



திருமதி. கீதா ராமகிருஷ்ணன்



திருமதி. ஜானகி
சதீஷ்குமார்



திருமதி. ஜனனி
ரத்தினவேலு



திரு. கார்த்திகேயன்
இராசிபாளையம்
துரைராஜ்



திருமதி.
கோகிலவாணி
செல்வரெங்கன்



திருமதி. லக்ஷ்மி ஸ்ரீ
சிவராம் பொன்னழகி



திருமதி. லாவண்யா
குழந்தைவேல்சாமி



திருமதி. லாவண்யா
ராமசந்திரன்



திருமதி. பிரியா
கிருஷ்ணகுமார்



திருமதி.ப்ரியங்கா
குமார்



திருமதி.பிரியதர்சினி
பார்த்தசாரதி



திருமதி. ரம்யா
சாந்தகுமார்



திருமதி. சங்கீதா தேவி
தமிழழகன்



திருமதி. சாந்தி சரவணன்



திருமதி. சாரதா தேவி சிவமுருகன்



திருமதி. சத்யா தினேஷ் குமார்



திருமதி. ஷெக்கினா யூனிஸ் இம்மானுவேல்



திருமதி.சிநேகா குருசுவாமி யோகராஜ்



திருமதி.சோனா மனோகரன்



திருமதி. சுதா குணசேகரன்



திருமதி. சுகன்யா வெங்கடேசன்



திருமதி. சூர்யா கணேஷ்



திருமதி. சூர்யா கிருஷ்ணமூர்த்தி



திருமதி. தமிழரசி வஜ்ஜிரவேலு



திருமதி.உஷா தங்கவேல்



திருமதி. வனிதா ஜெயராமன்



திருமதி. வசந்தபிரியா குருமூர்த்தி



திருமதி. வசந்தப்ரியா உதயகுமார்

# பராமரிப்பு குழு

பாராமரிப்பு பணியில் பன்முக தன்மையோடு பணியாற்றும் பராமரிப்பு குழு



திரு.கஜேந்திரன் குருநாதம் கிருஷ்ணா



திரு.காளிச்சரண் சுந்தரம்



திரு.இராமச்சந்திரன் செல்வராஜ்



திரு.சரவணன் சந்திரமோகன்



திரு.சீனிவாசன் செல்வராஜ்

அட்டை படம் ஒளிஎழுத்து கவிதை புகைப்பட கலைஞர் TA. சந்திரா

# மாற்று ஆசிரியர்கள்

கேட்ட மாத்திரத்தில் மாற்று ஆசிரியர்களாய் மாறி மனமுவந்து சேவை செய்யும் மாற்று ஆசிரியர்கள்



**திருமதி.சந்திரிகா சோமசுந்தரம்**



**திருமதி. மனோரஞ்சினி குமார்**



**திருமதி. ப.ரேணுகா தேவி**

# வருகை பதிவேற்ற குழு

வாரம் தோறும் வந்தவர்களின் பதிவை பதிவேட்டில் பதிவேற்றம் செய்யும் வருகை பதிவேற்ற குழு



**திருமதி.அன்னபூரணி ராஜேந்திரன்**



**திருமதி.ஆப்ரீன் நிஷா அவிகான்**

# நன்றியுரை



எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

எமது அன்னை மொழி தமிழ், உலகின் மிக அழகான, செழுமையான மற்றும் ஆழமான மொழியாகும். இது நமது அடையாளமாக, கலாச்சாரம் மற்றும் மரபின் பிரதிபலிப்பாக வாழ்ந்து வருகிறது. எமது மொழி மட்டுமின்றி, எமது பண்பாட்டு பண்புகளும் தொலைதூரங்களில் இருக்கும் இங்கு வாழும் தமிழர்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி எமது தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தை கற்றுக்கொள்கின்ற, அன்றாட வாழ்க்கையின் பாகமாக ஏற்றுக்கொள்ளும் ஒரு இடமாக விளங்குகிறது. தமிழை கற்றுக்கொள்வது, பெரும்பாலும் தமிழ்நாட்டைத் தவிர்த்த பிற பகுதிகளில் ஒரு சவாலாக இருந்தாலும், அது எங்களுக்கு எத்தனை அவசியம், எத்தனை பெருமையாகவும் அமைந்துள்ளது என்பதை நாம் உணர்கிறோம்.

அப்படி தமிழ் மொழியின் திறமையான பயிற்சி, மாணவர்களுக்கு அவர்களின் மொழி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை சீராக காத்துக் கொள்ள உதவுகிறது. நமது அன்னை மொழியின் மீது கொண்ட அந்த பெருமையையும், அதை கற்றுக்கொள்ளும் அவசியத்தையும் எப்போதும் முன்னின்று பார்க்கின்றோம்.

இந்த ஆண்டின் முடிவில், எங்கள் பள்ளி வளர்ச்சியில் முக்கிய பங்களிப்புகளை செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறோம். நமது பள்ளியின் வளர்ச்சி மற்றும் நல் நிலைமைக்கு பள்ளி தலைவர் அளித்த மேலாண்மை மற்றும் வழிகாட்டுதலுக்கு எங்கள் நன்றி. உங்கள் ஆதரவு மற்றும் தீர்மானம் மூலம், நாங்கள் எமது பள்ளியின் கொள்கைகளையும், திட்டங்களையும் மேலும் சிறப்பாக செயல்படுத்த முடிந்தது.

பள்ளியின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பள்ளி குழுவின் ஆலோசனைகள் மற்றும் மேலாண்மை முக்கியமானது. எங்கள் வெற்றியில் உங்கள் பங்கு பெரியது, அதற்காக நன்றி தெரிவிக்கின்றோம். இந்த ஆண்டின் அனைத்து செயல்களுக்கும் முதல்வர் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டியமைக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது மாணவர்களை அறிவின் மூலம் வழிநடத்தி, தமிழ் மொழி கல்வி மூலம் அவர்களுக்கு எளிதாக தங்களின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் புரிந்துகொள்ள செய்த ஆசிரியர்களின் முயற்சி அளவிட முடியாதது. உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் உழைப்புக்கு எங்களின் மிக்க நன்றி. தூரதொடர்பு வகுப்புகள், இணையவழி ஆதரவு மற்றும் இணையதளம் சார்ந்த செயல்பாடுகள் வெற்றிகரமாக செயல்படுவதில் உதவி செய்த தொழில்நுட்ப குழுவிற்கு நன்றி. ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு பள்ளி செயல்பாடுகளை எளிதாக்கி, சிறப்பாக செயல்பட உதவி செய்த நிர்வாக குழுவிற்கு எங்கள் மனமார்ந்த நன்றி. தன்னார்வலர்கள் எங்கள் பள்ளிக்கு வழங்கிய அனைத்து உதவிகளுக்கும் எங்களின் நன்றி. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நீங்கள் அளித்த அர்ப்பணிப்பு மற்றும் உதவி, பாராட்டுக்குரிய பங்களிப்பு ஆகும்.

மாணவர்களின் கல்வியில் பெற்றோர்களின் ஒவ்வொரு பங்களிப்பும் பள்ளியின் வெற்றிக்கான முக்கிய அம்சமாகும். உங்கள் ஆதரவின் மூலம், மாணவர்கள் தமிழ் மொழியின் முக்கியத்துவத்தை அதிகமாக புரிந்துகொள்வதில் முன்னேற்றம் அடைந்துள்ளனர், மேலும், உங்கள் ஆழ்ந்த அக்கறையுடன் எங்களுக்கான தொடர்ந்த ஆதரவினை நாடுகின்றோம்.

இந்த ஆண்டு முடிவில், எமது அன்னை மொழி தமிழின் மீது நமக்கு ஏற்பட்ட பெருமையையும், அதன் கற்றல் பரப்பில் உள்ள முக்கியத்துவத்தையும் இன்னும் அதிகமாக நாங்கள் புரிந்துகொள்கிறோம். எமது பள்ளியின் வெற்றியில் பங்களித்த அனைத்து அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகள்

நன்றியுடன்


**திருமதி. பியூலா கிரேஸ் கோபி**

துணை முதல்வர்

சான் ஆண்டோனியோ தமிழ்ப் பள்ளி

# மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன்



















E1 C


E1 D


E1 E


E1 F


E1 G


E2 A


E2B


E2C


E2 D


E2 E


E2 F


E2 G


E2 H


E2 I


E3 A


E3 B


E3 C


E3 D




E4 A




E4 B




E4 C



E5 A




E5 B




I1A A மற்றும் B

*I1B*














# புதுமைகள் பல படைத்திடும் முயற்சி

**புதுமைகள் பல படைத்திடும் முயற்சியின் ஒரு பகுதியாக,**
**2024-25 கல்வியாண்டில் சான்றிதழ்களில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.**















# பட்டமளிப்பு விழா



2023-2024 ம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் ஆசிரியர்கள்

# ஆசிரியர்கள்



குழுவாக இணைந்து  குறும்பு செய்யும் அரும்புகளை
அரவணைத்து செல்லும் ஆசிரியர் குழுவின் புகைப்படம்.